| Article Date | Headline / Summary | Publication |
|---|---|---|
| 16 Nov 2025 | Are you going to take vehicle Insurance? You'll be safe if you take this out too, people! | Nanayam Vikatan |




**சுபாசிஷ் மஜூம்தார்,**
தலைவர் – மோட்டார் பாலிசி விநியோகம்,
பஜாஜ் ஜெனரல் இன்ஷூரன்ஸ்


# வாகனக் காப்பீடு எடுக்கப்போகிறீர்களா..? இதையும் சேர்த்து எடுத்தால்தான் பாதுகாப்பு மக்களே!

**இன்றைய வேகமான வாழ்க்கை முறையில் அதிக அளவிலான பயணங்கள் தவிர்க்க முடியாதவை. பயணங்கள் பெரும்பாலும் மிகவும் சவாலாகவும், பாதுகாப்பற்றதாகவும் இருக்கின்றன. பயணங்களில் எதிர்பாராத தருணங்களில் சாலை விபத்துகள் ஏற்படலாம். சாலையில் நடந்து போகும்போது, வாகனங்களை ஓட்டிச் செல்லும்போது, போக்குவரத்து நெரிசலில் சிக்கிச் சிரமப்படும்போது, நாம் எவ்வளவு கவனமாகச் சென்றாலும்கூட எதிர்பாராத திடீர் விபத்துகள் நிகழ்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.**

**இந்தக் காப்பீடு வாகனத்தின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் ஆகியோருக்கு விபத்துகளில் இருந்து நிதி ரீதியாகப் பாதுகாப்பு அளிக்கும் கவசமாக இருக்கிறது..!**

சாலையில் சிலர் செய்யும் தவறுகள் மற்றவர்களைப் பெருமளவில் பாதிக்கின்றன. இந்த எதிர்பாராத ஆபத்துகளில் இருந்து காக்கும் பாதுகாப்புக் கவசமாகத் தனிநபர் விபத்துக் காப்பீடு *(Personal Accident Cover)* இருக்கிறது. எதிர்பாராத நிகழ்வுகள் காரணமாக, வாழ்வு சீர்குலையும் சிக்கலான தருணங்களில் நிதி ரீதியாக பாலிசிதாரரையும், அவரின் குடும்ப உறுப்பினர்களையும் பாதுகாத்துக்கொள்வதற்கு சிறந்த, புத்திசாலித்தனமான ஒரு வழிதான், தனிநபர் விபத்துக் காப்பீட்டு பாலிசி.

### தனிநபர் விபத்துக் காப்பீடு என்றால் என்ன?

பைக், கார், லாரி போன்ற வாகனங்களுக்குக் காப்பீடு எடுக்கும்போது அனைவரும் கண்டிப்பாக எடுக்க வேண்டிய கூடுதல் பாதுகாப்பு அரண் இது. இந்தக் காப்பீடு வாகனத்தின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் ஆகியோருக்கு விபத்துகளில் இருந்து நிதி ரீதியாகப் பாதுகாப்பு அளிக்கும் கவசமாக இருக்கிறது. சாலையில் பயணிக்கும் அனைத்து வாகனங்களுக்கும் இந்தக் காப்பீடு எடுக்கப்பட வேண்டும். இந்தக் காப்பீடு எடுத்திருந்தால் ஒருவர் 2 சக்கர அல்லது 4 சக்கர வாகனங்களை ஓட்டும்போது, எதிர்பாராமல் சாலை விபத்துகளைச் சந்திக்க நேரிட்டால், இந்த பாலிசி மூலம் நிதிப் பாதுகாப்பை உறுதி செய்யலாம். உடல் உறுப்புகள் செயல்



இழத்தல் மற்றும் விபத்துகளால் மரணம் ஏற்பட்டால் இழப்பீடுகளும் இந்த பாலிசியில் கிடைக்கும்.

மோட்டார் வாகனச் சட்டம், 1988 மற்றும் இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் *(Insurance Regulatory and Development Authority of India-IRDAI)* பரிந்துரையின்படி மோட்டார் வாகனங்களுக்கான காப்பீடு எடுக்கும்போது, ரூ.15 லட்சம் அளவுக்கான தனிநபர் விபத்துக் காப்பீடு கட்டாயம் எடுத்துக்கொள்ள வேண்டும். நாம் ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று, சாலை விபத்துகளால் ஏற்படும் மரணம், நிரந்தர உடல் இயக்க பாதிப்பு அல்லது பகுதி உடல் இயக்க பாதிப்பு போன்ற இழப்பீடுகளுக்கு நிதிப் பாதுகாப்புக் கிடைக்கும். விபத்தால் ஏற்படும் பாதிப்பின் தீவிரத்தைப் பொறுத்து இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்யப்படும்.

இந்த தனிநபர் விபத்துக் காப்பீட்டின் முக்கிய நன்மைகள் பற்றிப் பார்ப்போம்.

**1. குடும்பத்துக்கான நிதிப் பாதுகாப்பு...**

சாலை விபத்துகளில் பாலிசிதாரருக்கு இறப்பு ஏற்பட்டால் பாலிசிதாரரின் குடும்பத்துக்கு காப்பீட்டுத் தொகை முழுமையாக இழப்பீடாக வழங்கப்படும். மொத்தத் தொகை இழப்பீடாகக் கிடைப்பதால் குடும்பத்தார் தமது உடனடிச் செலவுகளான இறந்தவரின் இறுதிச் சடங்குச் செலவுகள், வீட்டுத் தேவைகள், நிலுவையில் உள்ள கடனைத் திரும்பச் செலுத்துதல் போன்ற பல்வேறு தேவைகளுக்கு இந்த இழப்பீட்டுத் தொகையைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். வாழ்வில் ஏற்படும் இக்கட்டான நேரங்களில்,



Page 2 of 3.

நிதி ரீதியில் குடும்பத்தாரைப் பாதுகாப்பதை இந்தக் காப்பீடு உறுதி செய்கிறது.

**2. உடல் இயக்க பாதிப்பு மற்றும் வருமான இழப்பை ஈடு செய்தல்...**

விபத்துகள் சில நேரங்களில் ஒருவரது வாழ்வில் நீண்ட காலக் குறைபாடுகளை ஏற்படுத்தக்கூடும். ஒருவரின் ஊதியம் ஈட்டும் திறனை வெகுவாக பாதிக்கவும் செய்யலாம்.

விபத்தின் காரணமாக, சில மாதங்களுக்கோ, நிரந்தரமாகவோ ஒருவரால் பணிக்குச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படலாம்.



இது அவருக்கும், அவரின் குடும்ப உறுப்பினர்களுக்கும் நிதி ரீதியான சிரமங்களை ஏற்படுத்தலாம். இதில் இருந்து தற்காத்துக் கொள்வதற்கு இந்தக் காப்பீடு பெரிதும் பயன் அளிக்கும்.

விபத்து காரணமாக கை, கால்கள் மற்றும் கண்கள் இரண்டும் பாதிக்கப்பட்டால் முழு காப்பீட்டுத் தொகையும் இழப்பீடாகக் கிடைக்கும். ஒரு கண் அல்லது கை/கால் பாதிக்கப்பட்டால் பாதிப்புக்கு ஏற்ப இழப்பீடு கிடைக்கும்.

**3. குறைந்த பிரீமியத்தில் அதிக கவரேஜ்...**

இந்தக் காப்பீட்டின் மிகப் பெரிய ஆதாயம் என்பது இதற்குச் செலுத்தப்படும் பிரீமியம் குறைந்த அளவில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பது ஆகும்.

இந்தக் காப்பீட்டின் மூலம் ரூ.15 லட்சம் வரையிலான காப்பீட்டை மிகக் குறைந்த பிரீமியத்தில் பெற முடியும். இந்த பாலிசியை 30 வயதுள்ள ஆண் ஒருவர் ரூ.15 லட்சத்துக்கு எடுத்தால் ஆண்டு பிரீமியம் ரூ.825 மட்டுமே.

**4. சட்டபூர்வமான அவசியம்...**

மோட்டார் வாகனச் சட்டம், 1988-ன் படி உரிமையாளர் / ஓட்டுநர் ஆகியோருக்குத் தனிநபர் விபத்துக் காப்பீடு கட்டாயம் ஆகும். இதன் மூலம் அரசு விதித்துள்ள சட்ட பூர்வமான நடைமுறைகளைப் பின்பற்றுவதுடன் ஒருவருக்குப் பாதுகாப்புக் கிடைப்பதால், அதன் மூலம் மன நிம்மதி கிடைக்கும்.

விபத்து எந்த நேரத்தில் ஏற்படும் என்பதை எவராலும் கணிக்க முடியாது. அவ்வாறான எதிர்பாராத சம்பவங்கள் ஏற்பட்டால் தனிநபர் விபத்துக் காப்பீடு உங்களையும், உங்களுடைய குடும்பத்தாரையும் பாதுகாக்க உதவுகிறது. வாழ்வில் மிகவும் கடினமான தருணங்களில் நிதி ஆதரவை வழங்குகிறது. செலவுகள் பற்றிக் கவலைப்படாமல், இந்த விபத்து ஏற்படுத்திய சிக்கல்கள் மற்றும் பாதிப்புகளில் இருந்து வெளிவருவதற்கு உங்களுக்கு உதவுகிறது.

இந்தக் காப்பீட்டை எடுப்பது, மோட்டார் வாகனச் சட்டத்தை முறையாகப் பின்பற்றும் உங்கள் பொறுப்புணர்வைக் காட்டுவதாக இருக்கிறது. மேலும், சரியான மற்றும் போதுமான தனிநபர் விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் உங்களுக்கு மட்டுமல்லாமல் உங்கள் அன்புக்குரியவர்களின் வாழ்விலும் பாதுகாப்பையும், மன அமைதியையும் ஏற்படுத்துகிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.